ஆதிதிராவிடர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளர் அவர்களின் செயல்முறைகள்,
சென்னை-5
முன்னிலை: திரு சு.பார்த்திபன்.B.Sc.,

ந.க.எண்.இ5/26825/2022-1 நாள்.07.12.2023.

10/12/23

பொருள் : பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் கீழ்நிலை பதவியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் – பதவி உயர்வு வழங்கப்பட்டது – இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல்–சார்பு.

பார்வை : 1. இவ்வலுவலக ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறைகள் எண்.இ5/26825/2022, நாள்.08.08.2023.
2. இவ்வலுவலக ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயல்முறைகள் எண்.இ5/26825/2022, நாள்.20.09.2023.

&&&&&

**ஆணை**

பார்வை 1-இல் காணும் செயல்முறையின் படி 15.03.2023 அன்றைய நிலையில் கீழ்நிலை பதவியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களாக பதவி உயர்வு வழங்கிட இறுதி தேர்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டது. மேற்கண்ட தேர்ந்தோர் பட்டியலின் அடிப்படையில் திரு க.கலைச்செல்வன் என்பவருக்கு பார்வை 2-இல் காணும் செயல்முறையின்படி இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளதனை தொடர்ந்து தனியர் 22.09.2023 முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நேர்வில், திரு க.கலைச்செல்வன் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 22.09.2023 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. தனியர் தகுதிகாண்பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்வில் (DOM Test) தேர்ச்சி மற்றும் பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

7/12/23 Y/4

ஆதிதிராவிடர் நல இயக்குநரின்
நேர்முக உதவியாளர்.

பெறுநர்
திரு க.கலைச்செல்வன்,
இளநிலை உதவியாளர்,
அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி,
சின்னமநாயக்கன்பட்டி
கரூர் மாவட்டம்.

7/12/23

நகல்
1. தலைமையாசிரியர்,
அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி,
சின்னமநாயக்கன்பட்டி, கரூர் மாவட்டம்.
2. முக்கிய ஆவணத் தொகுப்பு.